# நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது தமிழர் கூட்டணி இருபிரிவாக வாக்களிப்பு

சபாநாயகர் எம். எச். முஹமட்டுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் இரு பிரிவாக பிரிந்து வாக்களித்துள்ளனர். நேற்று முன்தினமிரவு பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது அதற்கு எதிராக ஆளுங்கட்சியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களான ஜி. கருணாகரன், ஜே. திவ்விய நாதன், வி, ஜோசப், மாவை சேனாதிராசா, கே. ஸ்ரீனிவாசன் ஆகியோர் வாக்களித்தனர். மற்றைய பிரிவு கூட்டணி எம் பிக்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், ராஜாகுகனேஸ்வரன், இமானுவல் சில்வா, கே- நவரட்ணம், பிரின்ஸ் காசிநாதர் ஆகியோர் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்தவர்களான காமினி திஸநாயக்க, லலித் வில்லியம் அத்துலத் முதலி, ஜி. எம். பிரேமச்சந்திரா

—4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 272 பிரசோற்பத்தி புரட்டாதி 26 (12 · 10 · 1991) சனி

# தாக்கப்பட்ட மீனவருக்கு நஷ்டஈடு ஸ்ரீலங்காவிடம் இந்தியா கேட்கிறது!

## இந்தியப் பிரதித்தூதுவர் அறிக்கை சமர்ப்பித்தார்

கடந்த மாதம் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்ட இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு ஸ்ரீலங்கா அரசு நஷ்டஈடுவழங்க வேண்டும் என இந்திய அரசு கோரியுள்ளது.

இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டமை குறித்து இந்திய அரசு தனது கடும் ஆட்சேப அறிக்கை ஒன்றை இலங்கையில் உள்ள இந்தியப்பிரதித் தூதுவர் சேரிஜோர்ஜ் மூலம் வழங்கியுள்ளது.

கடந்த மாதம் தமிழ்நாடு இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 24 மீனவர்கள் கடலுக்குச் சென்றதாகவும், இவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் வழிமறித்து தாக்கி அனைவரையும் கடலில் குதிக்குமாறும் உத்தரவிட்டதாகவும் இக்கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடலில் குதித்த மீனவர்களில் மூவர் நீரில் மூழ்கிவிட்டனர் ஏனையோர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## விமானத்தாக்குதல்களால் நித்திகைக்குளம் காட்டில் எட்டு மைல் வெளியாகியுள்ளது!

மணலாறு நித்திகைக்குளம் காட்டுப்பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கடும் விமானத்தாக்குதல்களால் அடர்த்தியாக இருந்த காட்டுப்பகுதியில் எட்டு மைல் பிரதேசம் ஒரே வெளியாக இருப்பதாக அங்கிருந்து வந்த மணலாறு வாசி ஒருவர் தெரிவித்தார்.

எரிகுண்டுத் தாக்குதல்களால் மரங்கள் முறிந்த நிலையிலும், கருகிய நிலையிலும் சுடுகாடு போல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 07

## லெப். கேணல் விக்டர் 5 ஆம் நினைவு நாள்

லெப். கேணல் விக்டர் (மரிசலின் பியூஸ்லஸ் பனங்கட்டி கொட்டு மன்னார்) ஐந்தாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

1986 ஆம் ஆண்டு இதே தினத்திலேயே மன்னார், அடம்பன் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் விக்டர் வீரமரணமடைந்தார் இம்மோதலிலேயே 14இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இரு படையினர் உயிருடன் சிறை பிடிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## படை கைது செய்த ஆசிரியை பிணையில் செல்ல அனுமதி

கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ஆம் திகதி வவுனியாவில் படையினரால் கைதாகி தடுத்துவைக்கப்பட்டிருந்த ஆசிரியை வேலுப்பிள்ளை சரோஜாவை 28, இருவரின்உறுதியில் நன்னடத்தைப்பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிபதி ரி. பி உணம்புவ அனுமதியளித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. 08

## இரு வடபகுதி லொறிகள் அனுராதபுரத்தில் தடுத்துவைப்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த இரு லொறிகள் அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அனுமதியின்றி மதுபானங்களை மறைத்து வைத்துக் கெ ண்டுவந்தபோது அனுராதபுரத்தில் படையினர் நடாத்திய சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த லொறிகள் தடுத்துவைக்கப்பட்டன. 01

## ஆனையிறவு முகாம் நோக்கி அவ்ரோ போதிகள் வீசியது

நேற்றுக்காலை ஆனையிறவு முகாம் நோக்கி அவ்ரோ விமானம் ஒன்றிலிருந்து பொதிகள் வீசப்பட்டன.

காலை 8 30 மணியளவில் ஆனையிறவு முகாமைச்சுற்றி வட்டமிட்ட அவ்ரோ விமானம் முகாமை நோக்கி

—04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை நகரினுள் வெடிமருந்து கண்டுபிடிப்பு

திருகோணமலை நகரில் நேற்று முன்தினம் 19 கிலோ நிறையுடைய வெடிமருந்துப் பொதிகள் படையினரால் கண்டு பிடிக்கப் பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை நேற்றுக் காலையில் மூதூர் கடற்பகுதியில் இரு படகுகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சிங்கள மீனவர்கள் மீது துப்பாக்கித்தாக்குதல் நடாத்தப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சுயேட்சை எம். பிக்களுக்கு சிராவஸ்தியில் தங்க இடமில்லை

புதிய ஈரோஸ் (சுயேட்சை) எம் பிக்கள்கொழும்பில் சிராவஸதியில் தங்குவதற்கு அனுமதியில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது முன்னர் இந்த சுயேட்சை எம் பிக்கள் சிராவஸதியில் தங்குவதற்கு விண்ணப்பித்த போது எதிர்க்கட்சியினர் அதை எதிர்த்து கடுமையாக ஆட்சேபனை கிளப்பினர்.

இவர்களுக்கு சிராவஸதியில் இடமளிப்பதால் ஏனைய எம். பிக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும், எனவே இவர்களின் விண்ணப்பத்தை நிராகரிக்கும்படியும் அரசை வற்புறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனால், சுயேட்சை எம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## படையினர் சோதனை

தமிழக மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு கடலில் தூக்கி எறியப்பட்டு தீவுப்பகுதிகளில் நீந்திக் கரை சேர்ந்த சம்பவத்தையடுத்தே அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு பகுதிகளில் படையினரின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கு எதிராக கூட்டங்கள் எதிர்க்கட்சிகள் நடாத்தும்

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பன தோல்வியடைந்ததையடுத்து எதிர்க்கட்சியினர் நாடு முழுவதும் அரசுக்கு எதிராக பிரசாரக் கூட்டங்களை நடாத்தவுள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## எம். எச் முஹமட்டுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

சபாநாயகர் முஹமட் ஹனீபா முஹமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட இந்நிலையில் அவருக்கு எதிரான மற்றுமோர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

தென்னிலங்கையைச் சேர்ந்த வழக்கறிஞரான தர்மதாஸ ரூமஸ் என்பவர் சபாநாயகருக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சபாநாயகரின் நடவடிக்கை மீது ஆட்சேபம் தெரிவித்து மேற்படி வழக்கை வழக்கறிஞர் ரூமஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

# வன்னி கிராமிய வைத்தியசாலை
# இராணுவத்தினால் செயலிழப்பு!

வன்னி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள் தற்போதைய மோதல்கள் அசம்பாவிதங்கள் காரணமாக செயலிழந்துள்ளதாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சி. சி. கே. செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்திலுள்ள செட்டிகுளம், நேரியகுளம்' பாவற்குளம், பூவரசங்குளம் வைத்தியசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அலம்பிலில் இயங்கிய கொக்கிளாய் வைத்தியசாலையும் மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி, சிலாவத்துறை, மறிச்சுக்கட்டி ஆகிய வைத்தியசாலைகளும் செயலிழந்துள்ளன. (10)

## ஐ.நா. உறுப்பு நாடுகளின் தொகை
## 166 ஆக அதிகரிக்கிறது

ஐ நா வில் புதிதாக ஏழு நாடுகள் சேர விருப்பதை அடுத்து தற்போதுள்ள அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 159 இலிருந்து 166 ஆக அதிகரிக்க உள்ளது.

வடகொரியா, தென் கொரியா, மைக்ரோனேஷிய சமஷ்டி, மார்ஷல் தீவுக் குடியரசு, எஸ்தோனியா, லத்வியா, லிதுவேனியா ஆகிய 7 புதிய அங்கத்துவ நாடுகளுடன் சேர்ந்து ஐ. நா. அங்கத்துவம் 166 ஆக அதிகரிக்கும், (27)

## மறைபரப்பு ஞாயிறு

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மறை அறிவிப்புத் தினம் நினைவு கூரப்படுமென கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது (16)

## உணவு முத்திரை வந்து சேர்ந்தது

யாழ் மாவட்டத்திற்கான 1992 ஆம் ஆண்டு உணவு முத்திரைகள் யாழ் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வருட உணவு முத்திரைகள் விரைவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

வெளிநாடு சென்றவர்களுக்கும் மாதம் 700 ரூபா வருமானம் பெறுபவர்களுக்கும் உணவு முத்திரை நீக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (08)

## மாதாந்த பரிசுதியக் குலுக்கலில் அதிர்ஷ்டம் இவர்களுக்கு

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு சங்க சமாசத்தால் மாதந்தோறும் நடாத்தப்பட்டு வரும் பரிசுநிய சேமிப்புத் திட்டத்தில் குலுக்கல் மூலம் மாதாந்த அதிர்ஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரை மாதம் - வ. க. துரைராஜா (சித்திரமேழி போயிட்டி. சி. க. கூ. ச)

வைகாசி மாதம் - ச. கீர்த்திகா (நீர்வேலி துர்க்கா சி. க. கூ. ச.)

ஆனி மாதம் - வி. நவலோகம் (சித்திரமேழி போயிட்டி சி. க. கூ. ச.)

ஆடி மாதம் - வ. அற்புதமலர் (நவாலி முருகானந்தா சி. க. கூ. ச)

ஆவணி மாதம் - ஜெயமணி யோசப் (பண்டத்தரிப்புக் கிராமிய சி. க. கூ. ச.)

புரட்டாதி மாதம் - கு. தெய்வநாயகி (புத்தூர் மேற்கு கௌரிமாதர் சி. க. கூ. ச.)

இம் மாதத்திற்குரிய அதிர்ஷ்டசாலி 20 ஆம் திகதி நடைபெற இருக்கும் விசேட பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர். (04)

## இலக்கியப் போட்டி

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் வெள்ளி விழாவையொட்டி இலக்கியப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

சிறுகதை, கட்டுரை, கவிதை ஆகியவற்றில் நடாத்தவுள்ள இப்போட்டிக்கான முடிவுத் திகதி அடுத்த மாதம் 15 ஆம் திகதியாகும் (10)

## மொழித்தேர்ச்சியால் பாதிப்புற்ற அரச ஊழியர்க்கு நிவாரணம்

சிங்கள மொழித் தேர்ச்சி தொடர்பாக 1956 ஆம் ஆண்டின் திறைசேரி மற்றும் பொது நிருவாகச் சுற்றறிக்கைகளினால் பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது

தற்போது பதவியிலிருக்கும் பதவி உயர்வு மறுக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான சகல தடைகளும் 06-06-91 தொடக்கம் இதன்மூலம் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மொழித் தேர்ச்சி தொடர்பான 1956 ஆம் ஆண்டுச் சுற்றறிக்கை காரணமாக உரிய காலத்தை அடையமுன் இளைப்பாறிய அல்லது சேவையை விட்டு நீங்கிய உத்தியோகத்தர்கள் 05.06 91 தொடக்கம் அரச சேவையில் மீண்டும் சேர்க்கப்படவும் புதிய சுற்றறிக்கை வழி செய்கிறது.

அத்துடன் ஒய்வூதியம் பெற உரித்துடைய பதவிகளில் தொடர்ச்சியாகப் 10 வருடங்கள் சேவை செய்த ஊழியர்கள் இச் சட்டத்தினால் நிரந்தரமாக்கப்படாதிருப்பின் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவதுடன் ஒய்வூதிய உரிமை பெறவும் இது வழி செய்கிறது.

## சென். ஜோன்ஸ் கல்லூரி
### யாழ்ப்பாணம்

### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்த ஒன்றுகூடல்

மேற்படி ஒன்றுகூடல் 26-10-91 சனிக்கிழமை கல்லூரியில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர்களை அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| மு. ப | 7.00 | — நற்கருணை ஆராதனை |
| ,, | 8.15 | — காலைப் போசனம் |
| ,, | 9.00 | — வருடாந்தப் பொதுக்கூட்டம் |
| ,, | 10 00 | — 'கிரிக்கற்' ஆட்டம் |
| பி. ப. | 1.00 | — மதிய போசனம் |
| ,, | 2,30 | — கர பந்தாட்டம் |
| ,, | 3.30 | — உதை பந்தாட்டம் |
| ,, | 4.30 | — தேநீர் |

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் அவற்றினை 19-10-91க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 23-10-91க்கு முன்னதாக ரூபா. 65/- ஐ பொருளாளர் திரு. ந. யே. ஞானப்பொன்ராசா அவர்களிடம் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

கே. என். வை. மொறிஸ்
செயலாளர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்
12-10-91

10004

## கடலடி நீரோட்டத்தின் வரைபடம் தயாராகிறது

உலக வரைபடம் போன்று ஆழ் கடலின் அடியில் உள்ள நீரோட்டத்திற்கும் ஒரு வரைபடம் விரைவில் வரையப்படுவதற்கு சாதகமான முடிவுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப கட்டமாக துருவக் கடலின் கீழ் உள்ள நீரோட்டத்தைக் குறிக்கும் வரைபடமொன்று ஆற்றல் மிகு கம்பியூட்டர்களின் உதவியுடன் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

கடலின் அடியிலுள்ள நீரோட்டம் மேலுள்ள நீரோட்டத்தை விட பலமடங்கு பலமுள்ளது. பூமியின் வெப்பத்தை இந்த நீரோட்டம்தான் பல இடங்களுக்கும் கொண்டு செல்கின்றது.

கடலடி நீரோட்ட வரைபடம் உலக வானிலையை இலகுவில், துல்லியமாகக் கணிப்பதற்கு பெரிது கைகொடுக்குமென விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

## பண்டத்தரிப்புக் கோட்டப்பிரிவில் க.பொ.த. முன்னோடிப் பரீட்சை

1991 ஆம் ஆண்டு முதல் தடவையாக க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு முன்னோடிப் பரீட்சை ஒன்றை பாடசாலை மட்டத்தில் நடாத்த பண்டத்தரிப்புக்கல்விக் கோட்டம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பரீட்சை பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் உள்ள சகல பாடசாலைகளிலும் நடாத்தப்படவுள்ளது.

க. பொ த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல பாடங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். (18)

## கிழக்கிலும் 'மக்கள் மயம்'

அம்பாறை இ போ. ச டிப்போ இம்மாதம் முதல் மக்கள் மயப்படுத்தப்படுகிறது. இந்த டிப்போவில் 203 ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

இதேபோல கல்முனை டிப்போவும் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளது. (10)

## அரச கருமமொழி அமுலாக்கலுக்கு கனேடிய அரசின் நிதி உதவி

இலங்கையில் அரச கரும மொழி அமுலாக்கலுக்கு கனேடிப அரசு உதவி வழங்க முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இத் திட்டத்திற்கென கனேடிய அரசு ஐந்து கோடி முப்பது லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

## நோயாளிகளுடன் செல்வோரை மட்டுப்படுத்த நடவடிக்கை

அவசர சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் நோயாளிகளோடு உடன் செல்பவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளோடு செல்வதாகக் கூறிக் கொண்டு கொழும்பு சென்றவுடன் பலர் அவர்களை விட்டு விட்டு தமது சொந்த அலுவல்களை கவனிக்கச் செல்வதோடு பலர் தங்குமிட வசதிகள் எதுவுமின்றி வைத்தியசாலையிலே தங்குவதால் பல இடையூறுகள் ஏற்படுவதாக கொழும்பிலிருந்து புகார் செய்யப்பட்டதையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றின் எதிரொலியாக இம்முறை கண் தெரியாத, நடக்க முடியாத நோயாளிகளுடன் மட்டும் உறவினர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## காடுகளைக் கண்காணிக்க
## தமிழக அரசுக்கு புதிய விமானம்

இரவு நேரத்தில் வனவிலங்குகளையும், காடுகளையும் கண்காணித்து பாதுகாப்பதற்கென தமிழக அரசு புதிய இலகு விமானமொன்றை விரைவில் கொள்வனவுசெய்யவுள்ளது.

இந்த விமானத்தின் மூலம் தமிழக காடுகள் கண்காணிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.


## அதிர்ஷ்டம் அழைக்கிறது

தீராத கடன்தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்றவை நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்திபரிகாரங்களுடன் யந்திரங்களும் வழங்குகிறோம்.

ஸ்ரீ சக்திகணேஷ உபாசகர்

ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம்

ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி, நல்லூர்.

10003

# உரிமைக்காகப் போராடும் ஈழத்தமிழர்களின் வீரத்திற்கு சகலரும் தலைவணங்க வேண்டும் - டாக்டர் உதயமூர்த்தி

"இன்று இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் பெற்றுத் தரப்பட வேண்டும் அது கொடுக்கப்படாவிடில் தனிஈழம் அமைக்க உதவ வேண்டும். தனிஈழம் அமைந்தால் தமிழ்நாடு தனியே போகும் இந்தியாவுக்கு ஆபத்து என்பதெல்லாம் உண்மைகளை மூடி மறைக்கும் வஞ்சகத்தின் குரல்"

இவ்வாறு பிரபல மனோதத்துவ நிபுணரும் எழுத்தாளருமாகிய டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி தமிழகத்திலிருந்து வெளிவரும் 'ஜூனியர் விகடன்' சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களது பிரச்சினையில் உள்ள நியாயங்களை உணர்ந்து தான் பங்களாதேஷைத் தனிநாடாக்கிய இந்திராகாந்தி இலங்கைத் தமிழருக்கு இங்கே பயிற்சிமுகாம் நடத்த உதவினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி இன்று பேசவோ எழுதவோ பிரமுகர்களும் பல பத்திரிகைகளும் தயங்குகின்றன. காரணம் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஊறு செய்கின்றனர் என்கிற தப்பான விவாதம் தலைதூக்கி நிற்கிறது.

புத்திசாலிகளாக தமிழக மக்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உண்மை நிலைஎன்ன என்பதைஉணரவேண்டும் இலங்கைத் தமிழரின் உண்மையானபிரச்சினைகள், அங்கே அவர்கள்படும் அவதிகள், அநியாயங்கள் கூட இங்கு இருட்டடிப்பு செய்யப்படுகின்றன, அலட்சியப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு உதயமூர்த்தி தனது கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளார்

## உடுத்துறை சாதனை

அண்மையில் வெளிவந்த க. பொ. த உயர்தர பரீட்சை முடிவுகளில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகா வித்தியாலயம் சாதனையை நிலை நாட்டியுள்ளது

இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய பத்து மாணவர்களும் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக தகைமையைப் பெற்றுள்ளனர் (24)

## கல்விக் காட்சி இன்றும் நடைபெறும்

மருதனார்மடக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் கல்விக் கண்காட்சியினை நேற்றுக் காலை யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளரினால் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, இணுவில் சைவ மகாஜனா மகா வித்தியாலயம், இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளில் இக் கல்விக் கண்காட்சிக்குரிய பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன

இக் கண்காட்சி இன்றும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது (27)

## நூலக தினம் அனுஷ்டிக்கப்படும்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை நூலக தினமும், மரம் நாட்டு வைபவமும் நடாத்தப்படவுள்ளன.

நூலக தினத்தன்று பாடசாலை நூலகத்திற்குத் தேவையான நூல்கள் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளிடமிருந்து சேகரிக்கப்படவுள்ளன. (18)

## மாணவர் முத்திரை விரைவில்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல பாடசாலை மாணவர்களுக்கும் மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகள் வெகு விரைவில் வழங்கப்படவுள்ளன

இவ்வாண்டில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய நான்கு மாதங்களுக்குமே இதுவரை மாணவர் மதிய உணவு முத்திரை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

## தென்னிந்திய திருச்சபை உதவி

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தென்னிந்திய திருச்சபை நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றது.

அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை ஆகிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (24)

# தாண்டிக்குளம் வழியாக சைக்கிளில் செல்வதற்கு இராணுவம் மீண்டும் தடை!

வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வழியாக வடக்கிற்கு சைக்கிளில் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது, இது குறித்து கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன் அனுமதி இன்றி தாண்டிச்குளம் வழியாக சைக்கிளில் செல்வதற்கோ, சைக்கிளைக் கொண்டு செல்வதற்கோ இராணுவத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வவுனியாவில் இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 130 கடவுச்சீட்டுக்களுடன் வவுனிக்குளவாசி கைது!

130 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த வவுனிக்குளம் வாசியான பொ. ஸ்ரீதரன் என்பவரை கிரான்பாஸில் வைத்துப்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவரை 2500 ரூபா ரொக்கப் பிணையிலும் பத்தாயிரம் ரூபாய் சரீரப் பிணையிலும் செல்லகோட்டை நீதிவான் தற்போது உத்தரவிட்டுள்ளார். (10)

## கொத்தணி கலைவிழா

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலைகளின் அமைப்பு கொத்தணி மட்டத்தில் 'கலைவிழா' ஒன்றினை வெகு சிறப்பாக நடாத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (18)

## கூழாங்குளம் இரட்டைக் கொலை; சிப்பாயை தடுத்துவைக்க உத்தரவு

வவுனியா கூழாங்குளம் கிராமத்தில் கடந்தமாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் ஏற்பட்ட இரு பொதுமக்களின் மரணம் தொடர்பாக இராணுவ சிப்பாய் ஒருவரை தடுத்து வைக்கும்படி வவுனியா நீதவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவத்தில் என். குழந்தைவேல் (40) ஆர். இராமலிங்கம் (35) ஆகிய இரு குடும்பஸ்தர்கள் மரணமாகியிருந்தனர். (10)

## கலாநிதி கொல்வினின் இடத்திற்கு ராஜா புள்ளே புதிதாக நியமனம்

காலம் சென்ற கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வாவின் பாராளுமன்ற இடத்திற்கு ஐக்கிய சோசலிஸ முன்னணியினால் ராஜா புள்ளே புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராஜாபுள்ளே கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஐக்கிய சோசலிஷ முன்னணி சார்பில் எம், பி யாகத்தெரிவு செய்யப்பட்ட கலாநிதிகொல்வின் ஆர். டி சில்வா பதவியேற்கு முன்பேகாலமானதால் அந்த இடம் இதுவரை நிரப்பப்படாதிருந்து வந்தது

பாராளுமன்றத்தில் காலியாகவுள்ள ஐ சோ. முன்னணி தேசிய பட்டியில் ஆசனத்தை நிரப்ப நடவடிக்கையெடுக்கப்படுவதாக 'முரசொலி' ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

## 29 தமிழ்ப் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில்

கடந்த ஒருவருட காலத்திற்கும் மேலாக தொடரும் மோதல்கள் மற்றும் அசம்பாவிதங்கள் காரணமாக வவுனியா மாவட்டத்தில் சுமார் 29 தமிழ் மொழிப் பாடசாலைகள் செயலிழந்துள்ளதாக கல்வித் திணைக்களத்தின் மதிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

செட்டிக்குளம், புதுக்குளம் நெல்லுக்குளம் பூவரசங்குளம் மகாவித்தியாவயங்களும் நொச்சிமோட்டை கற்தபுரம் பாடசாலைகளும் இவற்றில் முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (27)

□ □

## அடையாளம் காணப்பட்டது

நாகர்கோவில் பகுதிக் காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்ட வயோதிபரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது

புலோலி தெற்கு காந்தியூரைச் சேர்ந்த ஆ. வல்லிபுரம் என்பவரே இச்சடலத்துக்குரியவர் என அவரது புகைப்படம் மூலம் அடையாளம் காணப்பட்டது. (10)

## யாழ் பட்டதாரிகள் கொழும்பில் சான்றிதழ் பெறலாம்

யாழ் பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து தமக்குரிய தராதரப் பத்திரங்களை இதுவரை பெறாதோர் அவற்றைக் கொழும்பில் பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தில் வைத்து இச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

★ செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை

# முல்லை ராணுவ நடவடிக்கையால் 25 ஆயிரம் மக்கள் அகதிகளாகினர்

இராணுவ நடவடிக்கைகளினால் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 25 ஆயிரம் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள அறிகைகையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளினால் வீடுகளை இழந்த 750 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள் தம்மால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மொத்தம் 8 லட்சம் மக்கள் அகதிகளாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரியாலையில் நாளை ஞாபகார்த்தப் போட்டி

அமரர் த ஆலாலசுந்தரத்தின் (மின் பொறியியலாளர்) ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக அரியாலை, மத்திய விளையாட்டுக்கழகம் 40 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்றினை நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஷூறா விளையாட்டுக் கழக அணி ஆடவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் ஸ்ரான்லிக் கல்லூரி கிரிக்கெட் பயிற்றுனர் கே. சண்முகலிங்கம் மேற்கொண்டுள்ளார். 16)

## இன்று இறுதிப் போட்டி

யாழ் றோட்றிக் கிளப் சென்றபலமாதங்களாகயாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையில்நடாத்திவந்த வினாவிடைப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

இவ் வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பி. பாலசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (16)

## விண்ணப்பம் ஏற்கப்படுகின்றது

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் 92 ஆம் ஆண்டுக்குரிய பயிற்சி நெறி விண்ணப்பம் தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 30 ஆம் திகதி யாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

## சிற்றூரவை சந்திப்பு

சங்கானை பிரதேசச் சிற்றூரவைகளுக்கான சந்திப்புக்கள் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வட்டு இந்துக்கல்லூரியிலும், காலை 10 மணிக்கு வெலிலி திரையரங்கிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## போர்க்கால விளக்கவுரை

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் அருகாமையில் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6. 30 மணிக்கும், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியா சாலையில் இரவு 7. 30 மணிக்கும் போர்க்கால விளக்கவுரைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## ஒய்வூதியர் கூட்டம்

வடமராட்சிப்பகுதி ஒய்வூதியர்களுக்கான அரச ஒய்வூதியர் சங்கக் கூட்டம் நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (08)

# ருமேனிய அதிகாரி கடத்தப்பட்டதற்கு மேலும் நான்கு சீக்கிய அமைப்பு உரிமை

புதுடில்லியில் ருமேனியத் தூதரகப் பொறுப்பதிகாரி கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் நேற்று புதிய திருப்பம் ஒன்றைச் சந்தித்துள்ளது.

ருமேனியப் பொறுப்பதிகாரியை தாமே கடத்தியதாக நேற்று முன்தினம் காலிஸ்தான் விடுதலைப்புலிகள் என்ற சீக்கிய தீவிரவாத அமைப்பு ஒன்று உரிமை கோரியிருந்தது.

ஆனால் நேற்று காலிஸ்தான் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர் எனத் தம்மை அறிமுகப்படுத்திய ஒருவர் கொடுத்துள்ள கடிதம் ஒன்றில் ருமேனியப் பொறுப்பதிகாரியை கடத்தியது காலிஸ்தான் விடுதலைப் புலிகள் என்பது பொய்யானது வேறு நான்கு தீவிரவாத அமைப்புகள் இணைந்தே அவரைக்கடத்திச் சென்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறையில் இருக்கும் தமது இரு உறுப்பினர்களை விபிதலை செய்வதற்காக காலிஸதான் விடுதலைப்படை, பிந்திரன்வாலே புலிப்படை, காலிஸ்தான் கொமாண்டோப்படை, சீக்கிய மாணவர் சம்மேளனம் ஆகிய நான்கு அமைப்புகள் இணைந்தே ருமேனிய தூதரகப் பொறுப்பதிகாரியைக்கடத்திச் சென்றனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனால் கடத்தல் விடயத்தை கையாளும் இந்திய, ருமேனிய அதிகாரிகள் குழப்பமடைந்துள்ளனர்.

## மட்பாண்டக் கூட்டுத்தாபன ஊழியருக்குச் சம்பளமில்லை

ஓட்டுசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தில் கடமை புரிந்து வரும் சுமார் 65 ஊழியர்களுக்கு கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து இவ்வாண்டு அக்டோபர் மாதம் வரையிலான 16 மாதச் சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டுசுட்டான் மட்பாண்டக்கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர், கணக்காளர் சேர்ந்த தூதுக்குழுவொன்றும் இரண்டு தடவை கொழும்பு சென்று உயரதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடாத்தியும் எதுவித பிரயோசனமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் 58 ஊழியர்களை அரசு சென்ற ஜனவரி மாதத்திலிருந்து தென்னிலங்கையில் இயங்கும் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சென்று பணிபுரியும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஊழியர்களின் கண்டனத்தினால் இடமாற்றம் ரத்து திசய்யப்பட்டு மீண்டும் ஒட்டுசுட்டானில் கடமை புரியும்படி அரசு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. 07

## இன்று இறுதி நாள்

யாழ் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கற்கை நெறியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இன்று இறுதி நாளாக பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

இது எக்காரணம் கொண்டும் பிற்போடப்படமாட்டாது எனவும் ஆவணங்கள் உடன் சமர்ப்பிக்கப்படாவிடிலும் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது 01

## நரசிம்மராவை எதிர்த்து பி. ஜே. பி. போட்டியிடும்!

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இடைத்தேர்தலில் போட்டியிடவுள்ள நந்திலால் லோக்சபா தொகுதியில் தமது கட்சியும் போட்டியிடப் போவதாக பாரதிய ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

பிரதமர் போட்டியின்றி தெரிவதற்கு வசதியாக தெலுங்குதேசம்கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகள் அத்தொகுதியில் போட்டியிடுவதில்லை என விட்டுக்கொடுப்புச் செய்தன.

இவ்வேளையில் பாரதிய ஜனதா தாம் பிரதமர் நரசிம்மராவை எதிர்த்து அத்தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளமை இந்திய அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது,

இத்தொகுதியில் நரசிம்மராவ் பாரதிய ஜனதாவிடம் தோல்வியடைய நேரிட்டால் அது அவருடைய பிரதமர் பதவிக்கே ஆபத்தாகிவிடலாம் எனச்சுட்டிக்காட்டப்படுகிறது,

நந்திலால் தொகுதி பிரதமர் நரசிம்மராவின் சொந்த இடம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தொண்டர் ஆசிரியர் விவரம் சேகரிக்கப் படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு தொண்டர் ஆசிரியராகச் சேவையாற்றி ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யாது இடையில் நிறுத்தப்பட்டவர்களது விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப்பிரிவினர் கடந்த வாரம் முதல் இத்தகைய தொண்டர் ஆசிரியர்களது விவரங்களை அதிபர்கள் மூலம் சேகரித்து வருகின்றனர்.

வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சு இத்தகைய தொண்டர் ஆசிரியர்களது விவரங்களைக் கோரியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (18)

## பிரேமச்சந்திராவின் அமைச்சை பிரதமர் பொறுப்பேற்றார்

பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று தொழில், தொழில் பயிற்சி அமைச்சுப் பொறுப்பை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சராக கடமையாற்றிய முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா லலித் தலைமையிலான அதிருப்தியாளர் குழுவில் இணைந்துவிட்டமையால் இப்பதவி வெற்றிடமாகியது.

டி. பி. விஜேதுங்க ஏற்கனவே பிரதமராகவும், பாதுகாப்பு இணையமைச்சராகவும், நிதியமைச்சராகவும் மூன்று முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பிரேமதாஸவிற்கு நெருக்கமானவரும், நம்பிக்கைக்கு பாத்திரமானவரும் என டி. பி. விஜேதுங்க வர்ணிக்கப்படுவது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

## மனித உரிமை ஆணைக்குழு மட்டக்களப்புக்கு விஜயம்

ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தைச் சேர்ந்த ஐவரைக்கொண்ட குழுவொன்று மட்டக்களப்புக்குச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

இவர்கள், இந்த மாவட்டத்தில் காணாமல் போனோர் பற்றிய விவரங்களைச்சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (08)

## மானிய விலையில் கொப்பிகள்

அடுத்த ஆண்டு நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளுக்கு அப்பியாசக்கொப்பிகள மானிய விலையில் வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைக்கு நாடு முழுவதிலும் உள்ள பாடசாலை நலன்புரிச் சங்கங்கள், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவ முன்வரவேண்டும் எனவும் கல்வியமைச்சுக் கேட்டுள்ளது. (01)

## இரண்டாவது அரச சபையை மீண்டும் அமைக்க முயற்சி

1971 ஆம் ஆண்டில் நீக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது அரசசபையை மீண்டும் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டாவது சபை 100, பிரதிநிதிகளைக்கொண்டதாக செயற்படும்.

இதன் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருப்பர். இந்த உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் மாகாணமட்டத்தைக் கொண்டதாக இருக்கும்.

## சபாநாயகர் பதவி விலக தொண்டாவின் நிபந்தனை!

"சபாநாயகர் முஹமட் பதவிவிலக வேண்டும் எனக் கோருபவர்கள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை இரகஸியமாக தயாரித்தவர்களே"

இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று முன்தினமிரவு பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

"சபாநாயகர் நம்பமுடியாத நபர். அவரைப் பதவி விலகவேண்டும் என எதிர்க் கட்சியினர் கோருகின்றனர். அவர் பதவி விலகவேண்டுமானால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை இரகஸியமாக தயாரித்தவர்களும் பதவி விலகவேண்டும் என அவர் அப்போது சுட்டிக்காட்டிப் பேசினார்.

## 14 இஸ்ரேலியர் காயம்

நேற்று இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் பாலஸ்தீனிய தீவிரவாதிகள் ட்ரக் வண்டியினால் மோதி 14 இஸ்ரேலியப் படையினரை காயப்படுத்தினர்.

## கடன் வழங்கலிலும் கிழக்குத் தமிழர் புறக்கணிப்பு!

கிழக்கில் வீட்டு மின் இணைப்புக்கான கடன் வழங்கலில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் வீட்டு மின் இணைப்புக்கான இக்கடன் வழங்கப் பட்டு வருகின்றது.

கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் தவிர்க்கப்பட்டு' முஸ்லிம் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிகளிலேயே இக் கடன்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வுகல்முனை மக்கள் வங்கிக் கிளை மூலம் தற்பொழுது இக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### படையினர்...

ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எழுவைதீவு, அனலைதீவுப பகுதிகளில் கடற்படையினரின் சோதனை திடீர், திடீரென நடைபெறுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 01

### நம்பிக்கையில்லாப்...

சமரவீர வீரவன்னி, சந்திரா கங்கந்த, கே. வின்சன் பெரேரா, பிரேமரட்ன குணசேகர, லஷ்மன் செனிவரட்ன ஆகியோரும் வாக்களித்தனர்.

ஆரியரட்ன ஜெயதிலக. ரவீந்திர சமரவீர, எஸ். ஏ. முத்துபண்டா, வீரான் விதிலகரட்ன ஆகிய எம். பிக்கள் வாக்கெடுப்பின் போது கலந்துகொள்ளவில்லை.

### அரசுக்கு...

ளனர்.

இது தொடர்பாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஆலோசனை நடாத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியஇராணுவம் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி ஆயுதங்கள் வழங்கிய விடயத்தையே தமது "பிரசார ஆயுதமாக" பயன்படுத்த எதிர்க்கட்சித் தலைவர்கள் திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### திருமலை...

பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. ஒரு படகு தப்பி கரைசேர்ந்து விட்டதாகவும் மற்றைய படகுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### தாக்கப்பட்ட...

தப்பி அருகிலுள்ள தீவில் கரைசேர்ந்தனர் இவர்களை எல். ரீ. ரி ஈ அமைப்பினர் பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு சென்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத் திடம் ஒப்படைத்தனர். இம்மீனவர்கள் இம்மாதம் 7ஆம் திகதி இந்தியா வந்துள்ளனர்.

இவ்வாறு இந்திய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுயேட்சை...

பிக்களிற்கான சிராவஸதிஇட ஒதுக்கீடு குறித்து கடந்த சில வாரங்களாக தென்னிலங்கை அரசியலில்பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆனையிறவு...

17 பொதிகளை வீசியது. எனினும் அப்பொதிகள் முகாமிற்கு வெளிச்சுற்றாடலிலேயே வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## தவறான மதமாற்றம் பற்றி கத்தோலிக்கதிருச்சபை அறிக்கை

பிற கிறிஸ்தவ சபைகளின் செயல்களுக்கு கத்தோலிக்க திருச்சபை பொறுப்பாக இருக்க முடியாது என்றும் தாம் எவரையும் தவறான முறையில் மதம் மாற்றுவதில்லை என்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அறிவித்துள்ளது

மதம் மாற்றுவது தொடர்பாக வெளிவந்த செய்திகளை அடுத்தே இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது

பிற கிறிஸ்தவ சபைகளின் செயல்களுக்கு கத்தோலிக்க திருச்சபை பொறுப்பாக இருக்க முடியாது எனவும், இத்தகைய முயற்சியில் கத்தோலிக்க திருச்சபை ஈடுபடவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. 19

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 12.10.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.